# ಕರ್ನಾಟಕ ಶಾಲಾ ಪರೀಕ್ಷೆ ಮತ್ತು ಮೌಲ್ಯನಿರ್ಣಯ ಮಂಡಲಿ
**ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003**

**KARNATAKA SCHOOL EXAMINATION AND ASSESSMENT BOARD**
**Malleshwaram, Bengaluru – 560 003**

## 2024-25ರ ಎಸ್.ಎಸ್.ಎಲ್.ಸಿ. ಮಾದರಿ ಪ್ರಶ್ನೆಪತ್ರಿಕೆ-2
## S.S.L.C. MODEL QUESTION PAPER-2 – 2024-25

**ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು**

**Subject : First Language — TAMIL**

**ವಿಷಯ ಸಂಕೇತ : 10-T** **Subject Code : 10-T**

ಸಮಯ : 3 ಗಂಟೆ 15 ನಿಮಿಷಗಳು ] [ Time : 3 Hours 15 Minutes

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : **100** ] [ Max. Marks : **100**

---

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் வினாக்கள் 45-ஐ கொண்டுள்ளது.
2. வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
3. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
4. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக :** **6 × 1 = 6**

1. பகைவரின் மதிலை முற்றுகையிடுதல்

   (A) காஞ்சி (B) உழிஞை

   (C) வஞ்சி (D) வெட்சி

2. காஞ்சிபுரம் வாங்கினான் என்பது

   (A) தொழிலாகு பெயர் (B) காலவாகு பெயர்

   (C) இடவாகு பெயர் (D) சினையாகு பெயர்

3. பிரிக்க முடியாதது பிரித்தால் பொருள் தராதது

   (A) இரட்டைக் கிளவி (B) குழூஉக்குறி

   (C) அடுக்குத் தொடர் (D) வேற்றுமையணி

4. செய்யுளில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வருவது

   (A) மோனை (B) இயைபு

   (C) முரண் (D) எதுகை

5. முருகன் படிக்கிறான்

   (A) நிகழ்காலம் (B) இறந்தகாலம்

   (C) எதிர் காலம் (D) இவற்றுள் எதுவுமில்லை

6. குழலினிது

(A) குழலி + னிது (B) குழல் + இனிது

(C) குழ + லினிது (D) குழலி + இனிது

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக : 4 × 1 = 4**

7. மூன்று சீர்களைக் கொண்டது : சிந்தடி;

ஐந்து சீர்களைக் கொண்டது : ........................... .

8. பாரதியார் : தமிழ்க்கவிஞர்;

பம்பன் : ........................... .

9. மெய்யெழுத்து அளவெடுத்து ஒலிப்பது : ஒற்றளபெடை

உயிரெழுத்து அளவெடுத்து ஒலிப்பது : ................................

10. செப்பலோசை உடையது : வெண்பா

அகவலோசை உடையது : ........................... .

**III. ஒரு தொடரில் விடை தருக : 7 × 1 = 7**

11. சாறு என்றும் பேறு என்றும் குறிக்கப்படுவது யாது?

12. எவ்வெவற்றை நீக்கி வாழ்வது அறமாகும் ?

13. C.F.C. என்றால் என்ன?

14. இளைஞனின் நண்பன் எது ?

15. செய்யுளின் உறுப்புக்கள் யாவை ?

16. தொடை என்றால் என்ன ?

17. களிறெறிந்து வெற்றியோடு மீளுவது யாருடைய கடமையாகும் ?

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 10 × 2 = 20**

18. 'பிசி', 'புதிர்', ஆகிய சொற்களை விளக்குக ?

19. வள்ளுவர் கூறும் புலவர் இயல்பு என்ன ?

20. பம்பன் இயற்றிய நூல்கள் யாவை ?

21. பெண்கள் பாரினில் எதனை நடத்த வந்தனர் என்று பாரதியார் குறிப்பிடுகிறார் ?

22. பிறிது மொழிதல் அணியின் வேறு பெயர்கள் யாவை ?

23. பா வகைகள் யாவை ?

24. பிரம்மன் இராவணனுக்கு கொடுத்த சாபம் யாது ?

25. காளைகளுக்குச் சொல்வதுபோல் மக்களுக்குப் பட்டுக் கோட்டையார் கூறுவது என்ன ?

26. நிலக்கரி தரும் நன்மைகள் யாவை ?

27. அணி என்றால் என்ன ?

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : 4 × 3 = 12**

28. இளையான் குடி மாறர் மனைவி சிவனடியார் வடிவில் வந்த சிவனுக்கு அமுது படைக்க, சமைப்பதற்காக மேற்கொண்ட செயல்களை விளக்குக?

29. அனுமன் கையிலிருந்த மோதிரத்தை வாங்கியதும் சீதை அடைந்த நிலை யாது?

30. பாரதிதாசன் யாருக்கு என்ன புகழாரம் சூட்டுகிறார் ?

31. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாய்த திரும்பி வர நேரும்? அதன் விளைவு எது ?

**VI. குறிப்பு வரைக : 2 × 3 = 6**

32. பழமொழி நானூறு

33. மகாகவி பாரதியார்

**VII. கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக : 1 × 3 = 3**

34. வேற்றுமை அணியை சான்றுடன் விளக்குக.

**VIII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக : 3 × 3 = 9**

35. பாவம்; கொஞ்சம் நேரமாவது அவர்கள் அயர்ந்து தூங்கட்டும்.

36. ஓர் உலகமே பூமிக்கடியில் அமைக்கப்பட்டுள்ளது.

37. பட்டினி கிட பலாவையே உண்பதென்று.

**IX. கீழ் வரும் பழமொழியை விளக்குக :** **1 × 3 = 3**

38. ''மின்னுவதெல்லாம் பொன்னல்ல''

*அல்லது*

''முற்பகல் செயின் பிற்பகல் தாமே வரும்''

**X. அடிபிறழாமல் எழுதுக :** **1 × 4 = 4**

39. ''இந்திய நாடிது'' எனத் தொடங்கும் நாட்டு வாழ்த்துப் பாடல்

*அல்லது*

''பெருங்குணத்தார் சேர்மின்'' எனத் தொடங்கும் சிறுபஞ்ச மூலப் பாடல்.

**XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக :** **2 × 4 = 8**

40. சேதுப்பிள்ளையவர்கள் 'இவர்கள் கைவண்ணம் இங்கு கண்டோம்' என்னும் தொடரை நினைவூட்டும் நிகழ்ச்சியினை விவரிக்க.

41. விடுகதை இரண்டினை விளக்குக.

*அல்லது*

மக்கட்பேற்றைப் பற்றி வள்ளுவர் கூறுவனவற்றை எழுதுக

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுக :** **1 × 4 = 4**

42. பஞ்சம் பிழைக்க

வேறுதிசை பறந்தாலும்

கவளம் கண்டதும்

கரையும் காக்கை

உள்ளங் கைக்குள்

உட்கார வைத்தாலும்

நகரும் காற்று

*அல்லது*

ஈன்றுபுறந் தருத லென்றைக் கடனே

சான்றோ னாக்குத ற்தந்தைக்குக் கடனே

வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே

நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக :**

**1 × 4 = 4**

43. பாகவதமேள : பாடலும், ஆடலும் இணைந்த கூத்தினை 'பாகவத மேள' என்பர். இக்கூத்தின் தலைவன் 'பாகவதன்' என்னும் பாட்டுக்காரன் ஆவான்.

'கோடங்கி' என்பவன் நகைச்சுவை பாத்திரம் தாங்குகிறான். இவன் தாடி, மீசை, பெரிய வயிறு, கூம்பிய தொப்பி, பெரிய நாமம், சிவந்த ஆடை, இடுப்பில் மணிச்சரம் முதலிய ஒப்பனைகளோடு காட்சி தருகிறான்.

வினாக்கள்

a) பாகவதன் என்பவர் யார் ?

b) கோடங்கி என்பவனின் ஒப்பனை எவ்வாறு இருக்கும் ?

**XIV. மடல் எழுதுக :** **1 × 5 = 5**

44. உன் பள்ளியில் செல்லும் கல்வி சுற்றுலாவிற்கு அனுமதி கேட்டு தந்தைக்கு ஒரு கடிதம் எழுதக.

*அல்லது*

பள்ளி மாற்றுச்சான்றிதழ் கேட்டு உன் தலைமை ஆசிரியருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக:** **1 × 5 = 5**

45. தூய்மை இந்தியா

*அல்லது*

பெண் கல்வி